DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

----

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.2 COURT, SATTUR

| | |
|---|---|
| Name : மகேஸ்வரி | Father/Husband Name : காளி குமார் |
| Age : 34 | Village : இருக்கன்குடி |
| Taluk : | Calling : தனியார் பள்ளியில் வேலை. |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 17 Mar 2026 14:59

Respondent present.

**<u>எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>** :-

1. நானும் எதிர்மனுதாரரும் உறவினர்கள் என்றால் சரிதான், அவர் என்னுடைய மாமா மகன் ஆவார். உங்களுடைய திருமணத்திற்கு முன்பே எதிர்மனுதாரர் பற்றிய விபரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். திருமணம் என்னுடைய சம்மதத்தின் பேரில் தான் நடைபெற்றது என்றால் சரிதான். திருமணத்தின்போது எனக்கு அணிவிக்கப்பட்ட நகைகள் அனைத்தும் என்னுடைய விருப்பத்தின் பெயரில் அணிவிக்கப்பட்டவைகள் என்றால் சரிதான். திருமணத்திற்கு பிறகு எதிர்மனுதாரர் சென்னைக்கு சென்று விட்டார் என்றால் சரிதான். அப்பொழுது நான் எந்த கல்லூரியில் படித்து வந்தேன் என்றால் மேட்டமலையில் உள்ள கல்லூரியில் பி.எட் படித்து வந்தேன். அந்த படிப்பிற்கு தேவையான பணத்தை என்னுடைய கணவர் செலுத்தினார் என்றால் எனக்கு படிப்பு ஊக்கத்தொகையாக ரூபாய் 55,000/- வந்தது, அதுபோக மீதி ரூபாய் 20 ஆயிரத்தை என்னுடைய கணவரின் சித்தப்பா செலுத்தினார். என்னுடைய மற்ற செலவுகளை என்னுடைய கணவர் பார்த்துக் கொண்டார் என்றால் சரிதான்.

2. 2013 ஆம் ஆண்டிலிருந்து 2021 ஆம் ஆண்டு வரை எங்களுக்குள் பிரச்சனை எதுவும் கிடையாது என்றால் சின்ன சின்ன பிரச்சனைகள் தான். அதை நான் மனுவில் கூறவில்லை என்றால் சரிதான். 2023 மற்றும் 2024 ஆண்டுகளில் எங்களுக்குள் பிரச்சனை எதுவும் கிடையாது என்றால் சரிதான். நான் தற்போது செய்து வரும் வேலையில் இருந்து எனக்கு மாதம் ரூபாய் 10,000/- சம்பளம் வருகிறது. நான் கோவில்பட்டியில் வசித்து வந்தபோது ஆரியோ ஒர்க் படிப்பதற்காக என்னுடைய கணவர் தான் செலவு செய்தார் என்றால் நான் டியூசன் எடுத்து வந்தேன், அதிலிருந்து வந்த பணத்தை வைத்து படித்தேன். எல்லா செலவுகளையும் என்னுடைய கணவர் தான் பார்த்து வந்தார் என்றாலும், வழக்கிற்காக நான் பொய்யாக கூறுகிறேன் என்றாலும் சரியல்ல.

3. எதிர்மனுதாரருக்கு விஜயலட்சுமி மற்றும் கலைச்செல்வி ஆகியோர்களுடன் தொடர்பு இருப்பதாக நான் வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரருக்கு குடிப்பழக்கம் இருப்பதாக நான் கூறும் நிலையில் அதை தடுக்க நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்றால் சரிதான். உண்மையிலேயே எதிர்மனுதாரருக்கு குடிப்பழக்கம் இருந்திருந்தால் அதை தடுக்க நடவடிக்கை எடுத்திருப்பேன் என்றால் சரியல்ல. நான் கோவில்பட்டியில் இருந்து சாத்தூருக்கு வந்த போது என்னுடைய செல்போன் சுவிட்ச் ஆஃப் செய்யப்பட்டு இருந்தது என்றாலும், அதனால் எதிர் மனுதாரர் என்னை தேடி வந்த போது சந்தேகப்பட்டு தேடி வருகிறாயா

என்று கூறினேன் என்றாலும் சரியல்ல, நான் சாத்தூர் பேருந்து நிலையத்தில் இருந்தபோது அவர் இருசக்கர வாகனத்தில் வந்து என் மீது மோதி விட்டார், என்னுடைய செல்போன் பழுதடைந்துவிட்டது என்று நான் கூறியும் அவர் நம்பாமல் என்னை அடித்துவிட்டார். அப்பொழுது அங்கு இருந்த போலீசார் வந்து சத்தம் போட்டு எங்களை அனுப்பி வைத்தார்கள். இது சம்பந்தமாக நான் புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். உண்மையிலேயே நான் கூறுவது போல் சம்பவம் நடைபெற்றிருந்தால் புகார் கொடுத்திருப்பேன் என்றால் சரியல்ல.

4. நாங்கள் ஒரு ஆண்டாக பிரிந்து வாழ்ந்து வந்த காலத்தில் என்னுடைய கணவருக்கு வேலை எதுவும் இல்லை என்றாலும், அவர் நடத்தி வந்த போட்டோ ஸ்டூடியோ வியாபாரமும் நஷ்டமாகிவிட்டது என்றாலும் சரியல்ல. என்னுடைய கணவர் தற்போது எந்த வேலையும் இல்லாமல் இருக்கிறார் என்றால் சரியல்ல. என்னுடன் சேர்ந்து வாழ வேண்டும் என்று எதிர்மனுதாரர் கோவில்பட்டி சார்பு நீதிமன்றத்தில் மனு எண் 217/2025 தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான், நான் இந்த வழக்கை தாக்கல் செய்த பிறகுதான் தாக்கல் செய்தார். நான் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ சட்ட நடவடிக்கை எதுவும் எடுத்தேனா என்றால் இல்லை. தற்பொழுதும் எதிர்மனுதாரர் என்னுடன் சேர்ந்து வாழ தயாராக இருக்கிறார் என்றால் நான் அவருடன் சேர்ந்து வாழ சென்றாலும் அவர் என்னை டார்ச்சர் செய்வார்.

5. எதிர்மனுதாரர் மது அருந்துவிட்டு வந்து என்னுடன் பிரச்சனை செய்து 15.03. 2025 ஆம் தேதி என்னை வீட்டை விட்டு விரட்டி விட்டார் என்று நான் பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. 27.02.2025 ஆம் தேதி நான் கோவில்பட்டி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் கொடுத்த புகார் மனுவின் விசாரணையில் போலீசார் என்னை தான் எச்சரித்து அனுப்பினார்கள் என்றால் இருவரிடமும் கையெழுத்து வாங்கிவிட்டு அனுப்பினார்கள். எனக்கும் அசோக் என்பவருக்கும் திருமணத்தை மீறிய உறவு இருந்தது என்றாலும், அதை எதிர்மனுதாரர் தட்டிக் கேட்டதால் தான் இந்த வழக்கை நான் தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. என்னை பராமரித்துக் கொள்ளக்கூடிய அளவிற்கு நான் வருமானம் ஈட்டுவதால் எனக்கு இந்த மனுவில் எந்த பரிகாரமும் கிடைக்கக்கூடியதல்ல என்றால் சரியல்ல.

6. எதிர்மனுதாரர் என்னுடன் சேர்ந்து வாழ தயாராக இருந்தும் நான் எவ்விதமான நியாயமான காரணமும் இல்லாமல் எதிர்மனுதாரரை விட்டு பிரிந்து வாழ்ந்து வருகிறேன் என்றாலும், அதனால் எதிர்மனுதாரர் என்னை பராமரிக்க கடமைப்பட்டவரல்ல என்றாலும் சரியல்ல. இன்று நான் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ சென்றாலும் அவர் என்னை அழைத்து செல்ல தயாராக இருக்கிறார் என்றால் எதிர்மனுதாரர் மீது எனக்கு நம்பிக்கை இல்லை. நான் பொய்யான விபரங்களுடன் இந்த வழக்கை தாக்கல் செய்து உள்ளதால் என்னுடைய மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.17 Mar 2026 15:12

Judicial Magistrate 2, Sattur